கொண்டிருந்தால் நீடுழிகாலம் அந்த மன பிராந்தியோடு வாழுங்கள். நேற்று பேசிய இண்டஸ்ட்ரியலிஸ்டஸ் எங்களிடம் நம்பிக்கை கொண்டிருக்கிருர்கள் என்பது மட்டுமல்ல, புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிருர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 21/1968) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவு 2 நிறைவேற்றப்பட்டது

அட்டவணை நிறைவேற்றப்பட்டது.

நெடுந்தலைப்பு, முகப்புரை, பிரிவு 1 இவை நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, "இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 1968-ம் ஆண்டு நகராட்சி அதிகார மன்றங்கள் (பதவிக்காலம்--மன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்) திருத்த மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு சட்ட—கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

6. தீர்மானம்.

பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்தல்

THIRU K. VINAYAKAM : Sir, I move—

'That the rest of the business may be taken up tomorrow'. We have already come to the stage of 'brain-fag'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு திரு. விநயகம் அவர்களுடைய வேண்டுகோளைப் பேரவை ஏற்கிறது.

இத்துடன் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுறுகின்றன. நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.